Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 13, 2025

புதன்கிழமை 13, ஒகஸ்ட் 2025 | ஒளி: 11 கதிர் 027 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## 37ஆவது பொலிஸ் மா அதிபர்

இலங்கையின் 37ஆவது பொலிஸ் மாஅதிபராக பதில் பொலிஸ் மாஅதிபர் பிரியந்த வீரசூரிய நியமிக்கப்படவுள்ளார்.

ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில், செவ்வாய்க்கிழமை (12) கூடிய அரசியலமைப்பு பேரவை ஏகமனதாக அங்கீகாரமளித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ராஜிதவுக்கு பிடியாணை

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு நடத்திய விசாரணையில் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த கொழும்பு நீதவான் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை(12) அன்று பிடியாணை பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2



## 21/4 தாக்குதல்கள் விசாரணையை உறுதி செய்ய

# “பிரதி பாதுகாப்பு அமைச்சரை நீக்கவே வேண்டும்”

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜெயசேகரவுக்கு எதிராக, நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகரிடம், செவ்வாய்க்கிழமை(12) அன்று கையளித்த எதிர்க்கட்சியினர் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணையை உறுதி செய்ய பாதுகாப்பு அமைச்சரை நீக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை கையளித்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையில்,

(1) உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சதியின் அடித்தளமாகக் கருதப்படும் 2018 அரசியலமைப்பு விரோத சதியின் போது அதாவது 2018 நவம்பர் மாதத்தில் 17வது பாதுகாப்புப் படைப் பிரிவு (கிழக்கு) கட்டளைத் தளபதியாக அருண ஜயசேகர நியமிக்கப்பட்டதால், அதன் பிரகாரம் அவர் பாதுகாப்புப் படைப் பிரிவின் (கிழக்கு) கட்டளைத் தளபதியாகப் பதவியைப் பொறுப்பேற்றதாலும்;

தொடர்ச்சி P2



## திட்டமிடல் திறன்களுக்கு பயிற்சித் திட்டங்கள் தேவை

### சந்தோஷ் ஜாவிடம் பிரதமர் வலியுறுத்தல்

கல்வித் துறையில் இரு நாடுகளுக்கும் இடையே வலுவான ஒத்துழைப்பைக் கட்டியெழுப்புவதன் அவசியத்தைப் பிரதமர் வலியுறுத்தியதோடு, கல்வித் துறைசார் அதிகாரிகளின் தலைமைத்துவம் மற்றும் திட்டமிடல் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்களின் தேவையையும் அவர் வெளிப்படுத்தினார்.

தொடர்ச்சி P2

## நுண்நிதி, கடன் ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தைத் தயாரிக்க அங்கீகாரம்

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் என்றவகையில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவினால், சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



## புனித யாத்திரிகர் தலமாக சபரிமலை அங்கீகாரம்

இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித யாத்திரிகர் தலமாக சபரிமலை வழிபாட்டுத் தலத்தைப் பிரகடனப்படுத்தல் மற்றும் வசதிகளை வழங்க ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் கூடிய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

## “எந்த நடவடிக்கையும் நான் எடுக்கமாட்டேன்”



ஜனாதிபதி உரிமைகள் சட்டத்தை இரத்து செய்வதற்கு எதிரான எந்தவொரு சட்ட நடவடிக்கையிலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஈடுபடவில்லை என்று ஊடகப் பிரிவு கூறுகிறது.

தொடர்ச்சி P2

## ‘ஹூப்பை’ அகற்றி வன்புணர்ந்த வைத்தியருக்கு சிறை

ஒரு குழந்தையின் தாயின் (வயது 25) உடலில் பொருத்தப்பட்ட கருத்தடை சாதனத்தை அகற்றுவதாகக் கூறி, அவரை பாலியல் வன்கொடுமை செய்ததற்காக, மருத்துவர் ஒருவருக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்த அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி நளின் டி ஹேவாவசம், புகார்தாரருக்கு ரூ.1.5 மில்லியன் ரொக்க இழப்பீடு வழங்க உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## மின் கம்பியில் சிக்கி இருவர் பலி

ஒரு நெல் வயலில் சட்டவிரோதமாக விரிக்கப்பட்டிருந்த மின்சார கம்பியில் சிக்கி இரண்டு பேர் இறந்த சம்பவம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் பேரில் உரகஸ்மன்ஹந்திய பொலிஸ் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## கடல்சார் பயிற்சி...

இந்தியா-இலங்கை இருதரப்பு கடல்சார் பயிற்சியின் 12ஆவது பதிப்பு SLINEX-2025, ஒகஸ்ட் 14 முதல் 18 வரை கொழும்பில் நடைபெற உள்ளது. ஒகஸ்ட் 14 முதல் 16 வரை துறைமுக கட்டம், அதைத் தொடர்ந்து ஒகஸ்ட் 17 முதல் 18 வரை கொழும்பு கடற்கரையில் கடல் கட்டம் என இந்தப் பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்தப்படும்.

## ‘எல்ல வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்’

வார இறுதி நாட்களில் நுவரெலியா மற்றும் எல்ல பகுதிகளுக்கு வருகை தரும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக, இந்த மாதம் 16ஆம் திகதி முதல் ஒவ்வொரு வார இறுதியிலும் ‘எல்ல வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்’ இயக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த ரயில் ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 5.30 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து புறப்பட்டு ஞாயிற்றுக்கிழமை இரவு 7.20 மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்குத் திரும்பும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 5.30 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்டு, மாலை 3.55 மணிக்கு பதுளையை அடையும்.

தொடர்ச்சி P2



## “பிரதமர் பதவியில் மாற்றம் இல்லை”




தற்போதைய பிரதமர் பதவியில் எந்த மாற்றமும் இருக்காது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

### மீகொட துப்பாக்கிச் சூட்டில்

## முன்னாள் உறுப்பினர் பலி; துப்பாக்கிதாரி கைது



மீகொட பகுதியில் செவ்வாய்க்கிழமை (12) மதியம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் 47 வயதான சாந்த முதுங்கொடுவ மரணமடைந்தார்.

மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படும்போது, உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

# ராஜிதவுக்கு பிடியாணை

முன்னாள் அமைச்சர் வாக்குமூலம் பதிவு செய்வதைத் தவிர்த்து வருவதாகவும், அதன் மூலம் விசாரணைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சமர்ப்பிப்புகளைப் பரிசீலித்த பின்னர் கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேகர இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

# புனித யாத்திரிகர் தலமாக சபரிமலை அங்கீகாரம்

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தியாவின் கேரளாவில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு இலங்கையின் இந்து பக்தர்கள் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 01ஆம் தொடக்கம் அடுத்த வருடத்தின் ஜனவரி மாதம் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சென்று தரிசிக்கின்றனர். இது நீண்டகாலமாக இடம்பெற்று வருகிறது.

தற்போது ஆண்டுதோறும் 15,000இற்கும் அதிகமான இலங்கையின் இந்து பக்தர்கள் கலந்து கொள்கின்ற தலயாத்திரை மையமாகவும் அமைந்துள்ளது.

அதற்கமைய, இந்தியாவின் கேரளா மாநிலத்தில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் ஆலயத்திற்கு இலங்கை இந்து யாத்திரிகர்களால் மேற்கொள்ளப்படுகின்ற வழிபாட்டு தரிசிப்பானது, இலங்கை அரசால் அங்கீகரிக்கப்பட்ட புனித தலயாத்திரையாகப் பிரகடனப்படுத்துவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# 'ஹப்பை' அகற்றி வன்புணர்ந்த வைத்தியருக்கு சிறை

இழப்பீடு வழங்கப்படாவிட்டால், குற்றம் சாட்டப்பட்ட மருத்துவருக்கு மேலும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இழப்பீட்டுத் தொகைக்குக் கூடுதலாக, ரூ.100,000 ரொக்க அபராதம் செலுத்த உத்தரவிட்ட நீதிபதி டாக்டர் இழப்பீடு வழங்கப்படாவிட்டால், குற்றம் சாட்டப்பட்ட மருத்துவருக்கு மேலும் மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இழப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாக, ரூ.100,000 ரொக்க அபராதம் செலுத்த உத்தரவிட்ட நீதிபதி டாக்டர் நளின் டி ஹேவாவசம், அபராதம் செலுத்தப்படாவிட்டால் மேலும் ஒரு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட மருத்துவருக்கு தண்டனை விதித்த அனுராதபுரம் உயர் நீதிமன்ற நீதிபதி டாக்டர் நளின் டி ஹேவாவசம், குற்றம் சாட்டப்பட்ட மருத்துவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிப்பதில் அரசு தரப்பு வெற்றி பெற்றுள்ளதாகக் கூறினார்.

அதன்படி, குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் அவர் குற்றவாளியாகக் காணப்படுவார் என்று உயர் நீதிமன்ற நீதிபதி கூறினார். டி ஹேவாவசம், ஞஅபராதம் செலுத்தப்படாவிட்டால் மேலும் ஒரு வருடம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட மருத்துவருக்கு தண்டனை விதித்த அனுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிபதி டாக்டர் நளின் டி ஹேவாவசம், குற்றம் சாட்டப்பட்ட மருத்துவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிப்பதில் அரசு தரப்பு வெற்றி பெற்றுள்ளதாகக் கூறினார்.

அதன்படி, குற்றம் சாட்டப்பட்டவர் மீது சுமத்தப்பட்ட பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

# "பிரதி பாதுகாப்பு அமைச்சரை நீக்கவே வேண்டும்"

(2) உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் முக்கியமான தகவல்கள் பலவற்றை வெளிப்படுத்தி சந்தேக நபர்களைக் கைது செய்யும் வவுணதீவு பொலிஸ் காவலரணில் இலங்கை பொலிஸ் கான்ஸ்டபிள்கள் இருவரின் கொலை நடந்த சந்தர்ப்பத்தில் அருண ஜயசேகர அவர்கள் பாதுகாப்புப் படைப் பிரிவின் (கிழக்கு) கட்டளைத்தளபதியாக பணியாற்றியதாலும்;

(3) உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் தீர்மானமிக்க நிகழ்வான சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தின் சம்பவம் நடந்த சந்தர்ப்பத்தில் கௌரவ அருண ஜயசேகர அவர்கள் பாதுகாப்புப் படைப் பிரிவின் (கிழக்கு) கட்டளைத் தளபதியாக பணியாற்றியதாலும்;

(4) உரிய சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்திலிருந்து இலங்கை இராணுவத்தின் சிலருக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத் தடையைப் பெற்றுள்ளதாலும்;

(5) கட்டுவாப்பிட்டி தேவாலயத்தின் குண்டுதாரி ஹஸ்துன் என்பவரின் மனைவி என அழைக்கப்படும் சாரா ஜஸ்மின் மறுபெயர் புலஸ்தினி மஹேந்திரன் சாய்ந்தமருதுவில் குறித்த இடத்தில் இருந்ததாகவும், குண்டு வெடித்த பின்னரும் அவர் உயிருடன் இருந்ததாகவும் சஹ்ரானின் மனைவி பாத்திமா ஹாதியா தெரிவித்துள்ளதால், குற்றப் புலனாய்வுத் திணைக்களமும் அவர் இறந்துவிட்டதாகக் கூறப்பட்ட சம்பவம் சந்தேகத்துக்குரியது என்று தெரிவித்துள்ளதாலும்;

(6) உரிய சாய்ந்தமருது சம்பவம் தொடர்பில் இப்போது விசாரணையைத் தொடங்கி, இராணுவத்தின் அப்போதைய நடவடிக்கையில் பங்கேற்ற அப்போதைய கௌரவ அருண ஜயசேகர அவர்களின் கீழ் இருந்த அலுவலர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெற்றுக் கொள்ளுவது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலும்;

(7) இந்த சம்பவம் தொடர்பில் கௌரவ அருண ஜயசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தபடி அவரிடமிருந்தும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாலும்;

(8) வவுணதீவு மற்றும் சாய்ந்தமருது சம்பவங்கள் இரண்டிற்கும் தொடர்புடைய விசாரணைகளில் சாட்சியங்கள்/வாக்குமூலங்களை இராணுவ ஆளணியிடமிருந்து மேலும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் பெற்றுக்கொண்டிருப்பதாலும்;

(9) அருண ஜயசேகர, தேர்தலுக்கு முன்னரான காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் ஓய்வுபெற்ற முப்படை கூட்டமைப்பின் செயற்பாட்டு உறுப்பினராகப் பணியாற்றி, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேசிய பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டு, பாதுகாப்பு பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாலும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பதில் கடமையாற்றும் பாதுகாப்பு அமைச்சராக கடமையாற்றுவதனாலும்;

(10) உரிய சம்பவங்கள் குறித்து சாட்சியங்களை அளிக்கும் இராணுவ அலுவலர்கள் சாட்சியங்களை அளிக்கும்போது, அப்போதைய பிராந்திய பொறுப்பு பிரதானியாக இருந்த அருண ஜயசேகர தற்போது இராணுவத்துக்குப் பொறுப்பான அமைச்சின் பாதுகாப்பு பிரதியமைச்சராகப் பணியாற்றிக் கொண்டிருப்பதால், அலுவலர்கள் சாட்சியங்களை அளிக்கும்போது அவர்களின் பதவி உயர்வுகள்/இடமாற்றங்கள் மற்றும் பிற செயற்பாடுகளில் தாக்கம் ஏற்படக்கூடும் என்ற அச்சத்தில் சாட்சியங்களை அளிப்பதில் தயக்கம் காட்ட வாய்ப்புள்ளதாலும்;

(11) அப்போதைய பாதுகாப்புப் படைப் பிரிவு (கிழக்கு) கட்டளைத் தளபதியாக இருந்த அருண ஜயசேகரவின் கீழ் இருந்த அலுவலர்கள் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவதால், அவர்,குறித்த அலுவலர்கள் கடமைபுரிந்த இராணுவத்துக்குப் பொறுப்பான அமைச்சின் பாதுகாப்பு பிரதியமைச்சராகப் பணியாற்றுவதால் விசாரணை குறித்து சந்தேகங்கள் எழுவதற்கு வாய்ப்புள்ளதாலும்அக்கறைமுரண்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாலும்;

(12) உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்குவதாக தேர்தல் வாக்குறுதி அளித்த அரசாங்கத்தில் அருண ஜயசேகர பிரதியமைச்சராக பொறுப்பான பதவியை வகித்தும் இதுவரை உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க முடியாது போயுள்ளதாலும்;

(13) உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணைகள் தொடர்பில் அருண ஜயசேகர இராணுவத்தில் பதவி வகித்த காலப்பகுதியில் முறையான நடவடிக்கைகள் எடுக்காத பின்னணியில், தற்போதைய அரசாங்கத்தின் பிரதியமைச்சராகப் பணியாற்றுவதால், குறித்த விசாரணைகளில் ஏதேனும் அழுத்தம் ஏற்படக்கூடும் என கத்தோலிக்க திருச்சபை கருதுவதாலும், குறித்த விசாரணைகளின் நம்பகத்தன்மை தொடர்பில் பிரச்சினைகள் உள்ளதாக கர்தினால் அவர்களின் பேச்சாளர் வணக்கத்துக்குரிய சிரில் காமினி அருட்தந்தை தெரிவித்துள்ளதாலும்;

(14) உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணை நடத்துவது சவாலானதும், அரசாங்கத்தால் அரசாங்கத்தையே விசாரணைக்கு உட்படுத்துவது கடினமாகியுள்ளதாகவும், அரசாங்கத்தை அரசாங்கமே விசாரணைக்கு உட்படுத்த வேண்டியுள்ளதாகவும்,சனாதிபதி அவர்கள் கர்த்தினால் அவர்களின் ஆன்மீக வாழ்க்கையின் 50 ஆண்டுகள் நிறைவு முன்னிட்டு நடைபெற்ற விழாவில் தெரிவித்ததன் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணைகளைத் தடுக்க இன்னும் அரச இயந்திரத்தின் ஊடாக சதி நடைபெறுவதாக கருதுவதாலும்;

(15) பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர 2025.07.09 அன்று பாராளுமன்றத்தில் தெரிவித்ததன்படி உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணைகளில் வெளிப்படுவதுபோல் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக புலனாய்வுப் பிரிவின் சிறு குழுவும் அரசாங்க அலுவலர்களின் சிறு குழுவும் இதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிப்பதன் மூலம் அதனுடன் தொடர்புடைய புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள் பற்றி அவருக்கு விழிப்புணர்வு அல்லது புரிதல் இருக்கக்கூடும் என்று கருதுவதாலும்;

அருண ஜயசேகர அவர்கள் பாதுகாப்பு பிரதியமைச்சர் பதவி வகிக்கும் அரசாங்கத்தில், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணைகள் நடத்தப்படுவதால், அழுத்தங்கள் மற்றும் அக்கறைமுரண்பாடு ஏற்படுவதுடன், அதன்மூலம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விசாரணைகள் பாரபட்சமின்றி மற்றும் சுதந்திரமாக நடைபெறுமா என்பதில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பாதிக்கப்பட்டவர்களின், கத்தோலிக்க திருச்சபையின், பொதுமக்களின் நம்பிக்கை சிதைந்துள்ளதால், அருண ஜயசேகர பாதுகாப்பு பிரதியமைச்சர் பதவி வகிக்கும்போது உயிர்த்த ஞாயிறு தாக்ககுதல்விசாரணைகள் நடத்தப்படுவதால் இந்தஉயரிய சபையின் நம்பிக்கை இல்லாது போயுள்ளதால் அவர்,குறித்த பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்று இந்த உயரிய சபை தீர்மானம் நிறைவேற்றுமாக என குறிப்பிடப்பட்டுள்ளது.

# "எந்த நடவடிக்கையும் நான் எடுக்கமாட்டேன்"

ஜனாதிபதி உரிமைகள் சட்டத்தை ரத்து செய்வதற்கு எதிரான எந்தவொரு சட்ட நடவடிக்கையிலும் சந்திரிகா பண்டாரநாயக்க மற்ற நான்கு முன்னாள் ஜனாதிபதிகளுடன் சேர்ந்து சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாக வெளியான தகவலில் எந்த உண்மையும் இல்லை என்றும் ஊடகப் பிரிவு கூறுகிறது.

ஜனாதிபதி உரிமைகள் சட்டத்தை ரத்து செய்வதற்கு எதிரான எந்தவொரு சட்ட நடவடிக்கையிலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஈடுபடவில்லை என்றும் ஊடகப் பிரிவு வலியுறுத்துகிறது.

# மின் கம்பியில் சிக்கி இருவர் பலி

உரகஸ்மன்ஹந்திய பொலிஸ் பிரிவில் உள்ள அம்பா கஹா சந்திக்கு அருகிலுள்ள வயலில் இந்த சம்பவம், செவ்வாய்க்கிழமை (12) காலை இடம்பெற்றுள்ளது.

இறந்தவர்கள் உரகஸ்மன்ஹந்திய பகுதியைச் சேர்ந்தவர்கள், 46 மற்றும் 39 வயதுடையவர்கள் ஆவர், அங்கீகரிக்கப்படாத மின்சார கம்பிகளைப் பொருத்தியதாக சந்தேகத்தின் பேரில் இரண்டு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை உரகஸ்மன்ஹந்திய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 'எல்ல வீக்கெண்ட் எக்ஸ்பிரஸ்'

திரும்பவும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மதியம் 1.45 மணிக்கு பதுளையில் இருந்து புறப்பட்டு, அதே நாள் இரவு 7.20 மணிக்கு கொழும்பு கோட்டையை வந்தடையும்.

350 இருக்கைகள் கொண்ட இந்த ரயில், இலங்கையின் மலைநாட்டுப் பகுதியின் அழகிய பயண அனுபவத்தை வழங்குவதற்காகவும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# 37ஆவது பொலிஸ் மா அதிபர்

பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து தேசபந்து தென்னக்கோனை நீக்குவதற்கான பிரேரணை பாராளுமன்றத்தில் 2025.08.05 ஆம் திகதியன்று 177 வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டதை ஜனாதிபதிக்கு எழுத்துமூலமாக சபாநாயகர் அறிவித்திருந்தார்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக பணியாற்றுவதற்கு உயர்நீதிமன்றம் 2024 ஆண்டு ஜூலை மாதம் இடைக்காலத் தடை விதித்தது.இதனைத் தொடர்ந்து பொலிஸ் மாஅதிபர் பதவி வறிதான நிலையில் நியமனம் வழங்குவது இழுபறி நிலையில் காணப்பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பிரதி பொலிஸ்மா அதிபராக பதவி வகித்த பிரியந்த வீரசூரியவை பதில் பொலிஸ் மாஅதிபராக 2024 செப்டெம்பர் மாதம் நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

# திட்டமிடல் திறன்களுக்கு பயிற்சித் திட்டங்கள் தேவை

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவிற்கும் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கும் இடையில் ஆகஸ்ட் 11ஆம் திகதி பிரதமர் அலுவலகத்தில் சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு வலியுறுத்தினார்.

தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதன் அவசியம் குறித்தும், சிறந்த கல்வி வாய்ப்புகளையும் கல்வியின் தரத்தையும் மேம்படுத்துவதற்காக இலங்கையில் நடைமுறைப்படுத்த இருக்கும் கல்விச் சீர்திருத்தங்கள் குறித்தும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இதற்குப் பதிலளித்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தியத் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். குறிப்பாக, பெருந்தோட்டப் பாடசாலைத் திட்டங்கள், ஸ்மார்ட் (smart) வகுப்பறைகள் மற்றும் ஆசிரியர் பயிற்சித் திட்டங்கள் குறித்தும் அவர் விரிவாகத் தெளிவுபடுத்தினார்.

கல்வித் துறையில் தொடர்ந்தும் நெருக்கமாகப் பணியாற்ற இந்திய அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாகத் தெரிவித்த உயர்ஸ்தானிகர், இரு நாடுகளின் பல்கலைக்கழகங்களுக்கு இடையே புலமைப்பரிசில்களை வழங்குவதற்கான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வில், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புப் பிரிவின் இரண்டாம் நிலை செயலாளர் அசோக் ராஜு, வணிகப் பிரிவின் முதலாம் நிலை செயலாளர் Surabh Sablok, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# நுண்நிதி, கடன் ஒழுங்குபடுத்தல் சட்டமூலத்தைத் தயாரிக்க அங்கீகாரம்

நுண்நிதிக்கடன் சட்டத்தை நீக்கி நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிப்பதற்காகவும், 2023.10.09 அன்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஆனாலும், பல தரப்பினர்களால் இச்சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் தனது ஆணையையும் பிறப்பித்துள்ளது. அத்துடன், பாராளுமன்றத்தில் பொருளாதார நெருக்கடிகளின் தாக்கங்களுக்கு தீர்வுகாண்பதற்கான துறைசார் மேற்பார்வைக் குழுவுக்குஇச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன் உள்ளடக்கம் பற்றி பல்வேறு தரப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் மற்றும் மாற்று முன்மொழிவுகள் தொடர்பாக ஆராய்ந்து விதந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றை நியமிக்குமாறு குறித்த செயற்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, நியமிக்கப்பட்ட கொள்கை/நடவடிக்கை குழுவால் உயர்நீதிமன்ற ஆணையின் பிரகாரம் திருத்தங்கள் மற்றும் பல்வேறு தரப்பினர்களிடம் பெற்றுக்கொண்டுள்ள யோசனைகளையும் உள்வாங்கி, அதன் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபைச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு சமகால அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கும், மேற்குறிப்பிட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குறித்த சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# "பிரதமர் பதவியில்...

அதில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அப்போது, அமைச்சர் மேலும் கூறியதாவது,"பிரதமரை மாற்றும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. அரசாங்கத்திற்குள் எந்த நெருக்கடியும் இல்லை. எங்கள் அரசாங்கம் வீழ்ந்துவிடாது. எங்களுக்கு இடையே எந்த மோதலும் இல்லை. நாங்கள் நாட்டைக் கட்டியெழுப்புகிறோம். அரசியல் கலாச்சாரத்தை நாங்கள் கட்டி எழுப்புகிறோம்" என்றார்.

# முன்னாள் உறுப்பினர் பலி; துப்பாக்கிதாரி கைது

பொதுஜன ஐக்கிய பெரமுன மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினரான இவர், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து ஹோமாகம பிரதேச சபை உறுப்பினராக இருந்தார், கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் சர்வஜன பலய கட்சியில் போட்டியிட்டார், ஆனால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. முன்னாள் உறுப்பினர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது, வெள்ளை நிற காரில் வந்த ஒரு குழு துப்பாக்கிச் சூடு நடத்தி தப்பிச் சென்றது. மீகொட பகுதியில் ஹோமாகம பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரை சுட்டுக் கொன்ற துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தலவத்துகொட பகுதியில் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



















# ஷுஹதாக்கள் நினைவு தினம்

**பேரின்பராஜா சபேஷ், எம்.எஸ்.எம்.நூர்தீன்**

1990ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்டவர்களின் 35ஆவது ஷுஹதாக்கள் நினைவு தினம் செவ்வாய்க்கிழமை(12) ஏறாவூரில் அனுஷ்டிக்கப்பட்டது.

1990ஆம் ஆண்டு ஒகஸ்ட் 11ஆம் திகதி இரவு ஏறாவூர் மற்றும் அதனை சூழவுள்ள கிராமங்களிலும் 121 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களின் ஞாபகார்த்தமாகவே ஷுஹதாக்கள் நினைவு தினம் வருடாந்தம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இது தொடர்பான பிரார்த்தனை ஏற்பாடுகள் ஷுஹதாக்கள் ஞாபகார்த்த பேரவையின் ஏற்பாட்டில் அதன் ஷுஹதாக்கள் ஞாபகார்த்த பேரவைத் ஸ்தாபகத் தலைவர் எம்.எல்.அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெற்றது.



# இயங்காத நிலையத்திற்கு அமைச்சர் விஜயம்

**நிதர்ஷன் வினோத்**

யாழ். - மட்டுவில் பகுதியில் அமைக்கப்பட்டு இயங்காது உள்ள பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க செவ்வாய்க்கிழமை(12) காலை நேரில் சென்று பார்வையிட்டார்.

யாழ். மாவட்டத்தின் தென்மராட்சி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட மட்டுவில் பிரதேசத்தில் 2022 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 20 திகதி அன்று அன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் எந்தவொரு வர்த்தக செயற்பாடும் இடம்பெறவில்லை.

இந்த நிலையில், குறித்த பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நேரில் சென்று பார்வையிட்டதுடன் இயங்கச் செய்வதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

இந்த விஜயத்தின் போது யாழ். - கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், தென்மராட்சி பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர் .

குறித்த விஜயத்தைத் தொடர்ந்து யாழ். மாவட்ட செயலகத்தில் பொருளாதார மத்திய நிலையம் தொடர்பாகவும், கூட்டுறவு வங்கி தொடர்பாகவும் அமைச்சர் தலைமையில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் சிறுமி பலி



சிகிரியா, திகம்பதஹ வீதியில், பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று காரொன்றின் பின்னால் மோதி விபத்துக்குள்ளானதில் மூன்றரை வயதுடைய சிறுமி உயிரிழந்துள்ளதாக சிகிரியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை, சியம்பலகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த சசித்மி நெஹன்சா அலுவிஹார என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் தனது மகளை முன்னாடி கவட்டியில் வைத்துக்கொண்டு ஸ்கூட்டர் ரக மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது முன்னால் பயணித்த கார் மீது மோதியுள்ளது. இதன் போது சிறுமி தூக்கி வீசப்பட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இருப்பினும், சம்பவம் தொடர்பாக காரின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் தாய் சிகிரியா பகுதியில் உள்ள ஒரு சுற்றுலா ஹோட்டலில் பணிபுரிவதாகவும், அவரை அழைத்து வர சென்றுகொண்டிருந்தபோது, இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.





# அலங்கார ஆடித்தேர் உற்சவ பெருவிழா

**சிவா ஸ்ரீதரராவ்**

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற புலத்சிங்கள மில்ல கந்த அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த அலங்கார ஆடித்தேர் உற்சவ பெருவிழா வியாழக்கிழமை(07) அன்று கொடியேற்றத்துடன், ஆரம்பமாகி திங்கட்கிழமையுடன் (11) அன்று நிறைவு பெற்றது.

மேற்படி உற்சவப் பெருவிழாவின் பூஜைகள் அனைத்தும் ஆலய நிர்வாக சபை மற்றும் பக்த அடியார்களின் ஏற்பாட்டில் ஆலயத்தின் பிரதம குரு ஆகம வித்தகர் விஷ்வ பிரம்ம ஸ்ரீ.ந.ஐ.சந்திரலால் குருக்கள் தலைமையில் பல குருமார்களின் ஒத்துழைப்புடன் இடம்பெற்றன.



# பஸ் விபத்தில் பலரின் நிலைமை கவலைக்கிடம்

கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியில் பத்துஓயா பாலத்திற்கு அருகில் செவ்வாய்க்கிழமை (12) அதிகாலை 3.30 மணி அளவில் தனியார் பேருந்து ஒன்று டிப்பர் லொறியுடன் மோதிய விபத்தில் 28 பேர் காயமடைந்தனர்.

இவர்கள், பொலன்னறுவை, மின்னேரியா மற்றும் ஹிங்குராங்கொட மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மின்னேரியா பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக பொலன்னறுவை பொது மருத்துவமனையின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் கூறினார்.

அப்பகுதி மக்கள் பெரும் முயற்சி எடுத்து டிப்பர் லொறியின் சாரதியை மீட்டு. பொலன்னறுவை பொது மருத்துவமனையில் அனுமதித்தனர்.



# தங்க பிஸ்கெட்களுடன் ஆசாமி கைது

சுமார் 11 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள தங்க பிஸ்கட்களுடன் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது 1 கிலோ 2.66 கிராம் தங்க பிஸ்கெட்டுகள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

துபாயிலிருந்து வாகன உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்யும் போர்வையில் அவை நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாகன உதிரிப் பாகங்களுக்கு விதிக்கப்பட்ட வரியை சுங்க அதிகாரிகளுக்கு செலுத்திவிட்டுத் திரும்பி வந்தபோது, சந்தேகத்தின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர் சிலாபத்தில் வசிக்கும் 58 வயதுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# சிவகங்கை எம்.பியை சந்தித்தார் ஜீவன்

நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான், இந்தியாவின் சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினர் கார்த்தி பி.சிதம்பரத்தை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியா பயணத்தின் ஒரு பகுதியாகத் தமிழ்நாடு விஜயத்தின்போது, சிவகங்கை பாராளுமன்ற உறுப்பினரும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (AICC) உறுப்பினரும், தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் (AICC) துணைத் தலைவருமான திருவாளர் கார்த்தி பி.சிதம்பரத்தை சந்தித்துள்ளார்.

சிவகங்கை தொகுதியின் மானகிரியில் இடம்பெற்ற இச்சந்திப்பானது சுருக்கமானதாக இருந்தாலும் மிகவும் அர்த்தமுள்ளதாக அமைந்ததாகக் கருத்து தெரிவித்த ஜீவன் தொண்டமான் இந்தியா-இலங்கை பரஸ்பர விடயங்கள் குறித்தும், மேலும் பல முக்கிய விஷயங்கள் சார்ந்தும் இருவரும் பயனுள்ள கலந்துரையாடலை மேற்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# கரும்புத் தோட்டத்தில் அழுகிய சடலம்

**சுமனசிறி குணதிலக**

மொனராகலை,தொம்பகஹவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊருகொடை பிரதேசத்தின் கரும்புத் தோட்டமொன்றிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை (11) அன்று மீட்கப்பட்டுள்ளது.

தொம்பகஹவெல, ஊருகொடை பகுதியைச் சேர்ந்த ஒரு குழந்தையின் தந்தையான 43 வயதுடைய காமினி ரூபச்சந்திர ஜெயவர்தன என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறந்தவர் மன நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் , தனது சகோதரருக்கு சொந்தமான தோட்டத்தை கவனித்து வந்துள்ளார். அவருக்கு தேவையான பொருட்களை சகோதரன் மாதாமாதம் வழங்கியுள்ளார்.

இவ்வாறு பொருட்களை வழங்கி சுமார் இரண்டு வாரங்களுக்குப் பிறகு, திங்கட்கிழமை (11) தோட்டத்திற்கு சென்று பார்த்த போது தோட்டத்தின் வாடியில், சகோதரனின் உடல் முற்றிலும் அழுகிய நிலையில் காணப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான விசாரணையை சியம்பலாண்டுவ நீதவான் எஸ்.ஏ. தினுஷ்க ரோஷான் அனுருத்த மேற்கொண்டுள்ளார்.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் மூவர் கைது

சுமார் 169.50 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள வெளிநாட்டு சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வந்த மூவர் செவ்வாய்க்கிழமை(12) அன்று கட்டுநாயக்க விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கொழும்பில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த மூன்று தொழிலதிபர்கள் என தெரியவந்துள்ளது. அவர்கள் எமிரேட்ஸ் விமானம் EK-648 மூலம் துபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளதுடன் அவர்களிடமிருந்து 113,000 வெளிநாட்டு தயாரிப்பு ‘பிளாட்டினம்’ மற்றும் ‘மான்செஸ்டர்’ வகை சிகரெட்டுகள் அடங்கிய 565 சிகரெட் அட்டைப்பெட்டிகளைக் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசியல் என்பது ஓர் இலாபகரமான தொழில் அல்ல

மக்கள் இறையாண்மை என்பது குடிமகன் தன்னைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் முடிவுகளை எடுக்கும் உரிமையைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது.ஒரு தேர்தலில் வாக்களித்த பிறகு நாட்டின் குடிமகன் அல்லது வாக்காளரின் பங்கு முடிவடைவதில்லை.

துரதிர்ஷ்டவசமாக, இலங்கையில், பெரும்பான்மையான மக்கள் தேர்தலுக்குப் பிறகு செயலற்றவர்களாக மாறுகிறார்கள். அதன்படி, அந்தப் பிரிவுகளில் மிகச் சிலரே சமூக அரசியலில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த தேர்தல்களில் தொடர்ந்து கூறப்பட்ட விடயங்களில் ஒன்று, இனிமேல், மக்கள் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பொதுமக்களுக்குத் தகுதியற்ற எதையும் பெறக்கூடாது என்பதுதான். இது தற்போதைய அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையில் உள்ள ஒரு நடைமுறை அரசியல் வாக்குறுதியாகச் செயல்படுத்தப்படுகிறது.

அதன்படி, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னர் கிடைத்த ஒரு மில்லியன் ரூபாய் காப்பீட்டுத் தொகையை ரூபாயாகக் குறைக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

அதற்கு மேலதிகமாக, முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் அவர்களது குடும்பங்களின் பராமரிப்புக்காக அரசாங்கப் பணத்தை செலவிடக்கூடாது என்ற பிரச்சினை குறித்த அமைச்சரவைப் பத்திரமும் அங்கீகரிக்கப்பட்டது. இருப்பினும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் அரசியல்வாதிகளின் குழந்தைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு வெளிநாட்டுக் கல்வியை வழங்குவதற்காக மில்லியன் கணக்கான ரூபாய் செலவிடப்பட்டதாக சமீபத்திய கோப் குழு கூட்டத்தில் தெரியவந்தது.

ஐந்து வருட காலத்திற்குப் பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அதி சொகுசு வாகனம் வாங்க வாகன உரிமத்தைப் பெற உரிமை உண்டு. பாராளுமன்ற உறுப்பினர் துப்பாக்கி மற்றும் துப்பாக்கி பயிற்சியையும் பெறுகிறார். அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து துப்பாக்கிகளையும் திருப்பித் தருவதற்கான அறிவிப்பை பொது பாதுகாப்பு அமைச்சகம் சமீபத்தில் வெளியிட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பொது மக்களின் பிரதிநிதி. எனவே, பொதுமக்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர்களை விட அதிக சலுகைகள் மற்றும் அதிகாரங்கள் இருக்க வேண்டும். மக்கள் இறையாண்மையின் அதிகாரம் அவர்களிடம் இருப்பதால், எந்தவொரு தேர்தலிலும் அவர்கள் தங்கள் கருத்தின் அடிப்படையில் அரசாங்கங்களை கவிழ்க்க முடியும்.எனவே, அரசியல்வாதிகள் இந்த புரிதலின் அடிப்படையில் செயல்பட்டால் அது மிகவும் முக்கியமானது.

இதுவரை நாட்டை அது சென்று வந்த பாதையிலிருந்து வேறுபட்ட திசையில் நிலைநிறுத்துவது அவசியம். முன்னர் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டது போல, இது மிகவும் கடினமான மற்றும் முக்கியமான விஷயம். அரசியல் என்பது ஒரு பொது சேவை என்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொது மக்களுக்கு இல்லாத சலுகையாக எதுவும் வழங்கப்படக்கூடாது என்று ஜனாதிபதி தேர்தல் மேடையில் ஒருமுறை கூறப்பட்டது. அங்கு, மக்களும் கைகளை உயர்த்தி தங்கள் உடன்பாட்டை வெளிப்படுத்தினர். இப்போது செயல்படுத்தப்படுவது அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதாகும். அரசியல் என்பது ஒரு இலாபகரமான தொழில் அல்ல என்பதை அரசியல்வாதிகளும் பொதுமக்களும் புரிந்துகொள்ள வேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






# திசைக்காட்டியின் மேல் விழுந்த செயற்கைக் கோள்



எம்.எஸ்.எம்.ஐயூப்

பிரதமர் ஹரிணி அமரசூரிய 'சுப்ரிம் சட்' செயற்கைக் கோள் தொடர்பாக கடந்த 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்து எதிர்க் கட்சிகளுக்கு, குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு அரசாங்கத்தைத் தாக்கக் கிடைத்த அரியதோர் ஆயுதமாக மாறியுள்ளது.

இந்த செயற்கைக் கோளுடன் மஹிந்த ராஜபக்ஷவின் மகன் ரோஹித்த ராஜபக்ஷவின் பெயர் அடிக்கடி தொடர்புபடுத்டதப்பட்டு வந்தது. இந்த செயற்கைக் கொள் திட்டமானது ராஜபக்ஷ குடும்பத்தின் மற்றொரு ஊழல் என அக்கால எதிர்க்கட்சிகள் கூறி வந்தன. குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் வசந்த சமரசிங்க அவ்வாறு குற்றஞ்சாட்டி வந்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம் அரச பணம் பல கோடி ரூபாய் விரயம் செய்யப்பட்டுள்ளதாகவும் உண்மையிலேயே அவ்வானதோர் செயற்கைக் கோள் விண்ணுக்கு அனுப்பப்படவில்லை என்றும் அவர் கடந்த ஒரு தசாப்த காலமாகக் கூறி வருகிறார்.

ஆயினும், தாமே அந்த செயற்கைக் கோள் திட்டத்தின் பிரதம விஞ்ஞானி என்றும் அது வெற்றிகரமான திட்டமொன்று என்றும் ரோஹித்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இந்த நிலையில், இந்த செயற்கைக் கோள் திட்டத்தைப் பற்றிய உண்மையான நிலைமை என்ன என்று பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம்பாராளுமன்றத்தில் வாய்மூல கேள்வியொன்றைக் கேட்டிருந்தார். அதற்கு கடந்த 7ஆம் திகதி பாராளுமன்றத்தில் பதிலளித்த பிரதமர் இந்த விடயம் தொடர்பாகத் தாம் இலங்கை முதலீட்டுச் சபையிடம் தகவல்களைக் கேட்டதாகவும் அதன் படி முதலீட்டுச் சபை தம்மிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் கூறினார்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை விவரித்த அவர், இது அரசாங்கம் சம்பந்தப்படாத தனியார் நிறுவனமொன்றின் திட்டமொன்று என்றும் அந்நிறுவனம் அது தொடர்பாக முதலீட்டுச் சபையுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டுள்ளதாகவும் இதற்கு அரச நிதி செலவழிக்கப்படவில்லை என்றும் இத்திட்டத்தின் மூலம் இலங்கை பல பில்லியன் ரூபாய் வருமானத்தை ஈட்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அன்றே இந்த விடயம் தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் வசந்த சமரசிங்க முதலீட்டுச் சபை பிரதமருக்குப் பிழையான தகவல்களை வழங்கியிருப்பதாகவும் 'சுப்ரிம் சட்' நிறுவனம் பில்லியன் கணக்கில் வருமானத்தைத் தேடியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் கருத்து பிழையானது என்றும் அந்நிறுவனம் 342 மில்லியன் ரூபா மட்டுமே வருமானமாக அடைந்துள்ளதாகவும் அதுவும் நிறுவனத்தின் ஏனைய திட்டங்களாலேயே அவ்வருமானத்தைப் பெற்றுள்ளது என்றும் செயற்கைக் கோள் திட்டத்தால் அல்ல என்றும் தெரிவித்தார்.

ஆயினும், திருடர்கள் என்ற பெயரைப் பெற்றுள்ள ராஜபக்ஷக்கள் இப்போது பிரதமர் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்தை தமக்கு எதிராக இதுவரை தெரிவிக்கப்பட்டு வந்த சகல குற்றச்சாட்டுகளையும் நிராகரிக்கப் பயன்படுத்த முயல்வதாகத் தெரிகிறது.

இந்த அறிக்கை முன்வைக்கப்பட்ட முறையைப் பற்றி அரசாங்கத்துக்கு ஆதரவான பலர் சந்தேகப்படுகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க இத்தருணத்தில் இந்தக் கேள்வியைப் பிரதமரிடம் ஏன் கேட்க வேண்டும்? என்பது அவர்கள் எழுப்பும் முதலாவது கேள்வியாகும். அதேவேளை, பிரதமர் இந்த விடயத்தைப் பற்றி முதலீட்டுச் சபையிடம் அறிக்கையொன்றைக் கேட்டபோது, அதனைத் தயாரித்த அதிகாரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டவர் என்றும் கூறப்படுகிறது.

ஆயினும், பிரதமர் இந்த அறிக்கையைத் தீவிரமாக ஆராயாமல் சமர்ப்பித்தமையிட்டு மக்கள் விடுதலை முன்னணியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் பல உறுப்பினர்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையை முன்கூட்டியே பரிசீலிக்காமல் அவர் அதனை பாராளுமன்றத்தில் வாசித்துள்ளார் போலும்.

இந்த விடயம் தொடர்பாக இதற்கு முன்னர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்கள் கூறிய விடயங்களைப் பிரதமர் அறிந்திருக்கவில்லையா? என்ற கேள்வியும் இங்கே எழுகிறது. தெரிந்திருந்தால் அவர் இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் வாசிக்கு முன் அதனைப் பரிசீலித்து இருக்க வேண்டும். பரிசீலித்து இருந்தால், அதனை வாசிப்பதன் மூலம் தமது கட்சி எதிர்நோக்கும் அசௌகரியத்தை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

இந்த அறிக்கை மூலம் பொதுஜன முன்னணி பல விடயங்களைச் சாதிக்க முற்பட்டுள்ளதாகவும் தெரிகிறது. ஒரு புறம் தமக்கு எதிராக 13 ஆண்டுகளாக முன்வைக்கப்பட்டு வந்த குற்றச்சாட்டிலிருந்து தமது பெயரைத் தூய்மைப்படுத்திக்கொள்வது முதலாவது நோக்கமாகும். அடுத்ததாக மக்கள் விடுதலை முன்னணியினரிடம் தேசிய மக்கள் சக்தியினரும் பொய்யர்கள் என்று பிரசாரம் செய்வது மற்றொரு நோக்கமாகும். மூன்றாவதாக ஆளும் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவது மற்றொரு நோக்கமாகும்.

சிலவேளை, இந்த அத்தனை விடயங்களையும் திட்டமிட்டே சானக்க எம்.பி. இந்தக் கேள்வியைப் பிரதமரிடம் கேட்டிருக்கலாம் என்றும் சந்தேகிக்கலாம். தாம் கேள்வியைக் கேட்டபோது, பிரதமர் நிச்சயமாக அது தொடர்பாக முதலீட்டுச் சபையிடம் தகவல்களைக் கேட்பார். அப்போது கோட்டாபயவினால் நியமிக்கப்பட்ட அதிகாரி மூலம் இவ்வாறானதோர் அறிக்கையைத் தயாரிக்கலாம் என்று முன்கூட்டியே திட்டமிட்டும் இருக்கலாம்.

எவ்வாறாயினும், பிரதமர் சமர்ப்பித்த அறிக்கையால் 13 ஆண்டுகளாக மக்கள் விடுதலை முன்னணி ராஜபக்ஷ குடும்பத்தின் மீது சுமத்தி வந்த குற்றச்சாட்டொன்று பொய்யாகிவிட்டதாகப் பொதுஜன முன்னணி உள்ளிட்ட ஏனைய கட்சிகள் கூறுகின்றன. அதனை அமைச்சர் சமரசிங்க மறுத்தாலும் உண்மை என்னவென்று அரசாங்கம் உத்தியோகப்பூர்வமாக மக்களுக்கு விளக்க வேண்டும்.

இப்போது, இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி மக்கள் விடுதலை முன்னணிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையே உள்ள பிளவே ஹரிணியின் அறிக்கையை வசந்த சமரசிங்க மறுத்ததன் மூலம் தெரிகிறது என்றதோர் கருத்தைப் பரப்ப எதிர்க்கட்சியினர் முயல்கின்றனர். இந்த நிலையில், ஹரிணி பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் 54 எம்.பிக்கள் தேசிய மக்கள் சக்தியிலிருந்து விலகத் தயாராக இருக்கிறார்கள் என்றும் எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். ஆனால் ஹரிணியை விலக்கும் திட்டம் ஒன்று இருப்பதாகத் தெரியவில்லை.

இதற்கு முன்னர் பிரதமர் பல்கலைக்கழக மானிய குழுவின் தவிசாளராக பரிந்துரைத்தவரை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அப்பதவிக்கு நியமிக்காத போதும் திசைக்காட்டியும் ஜே.வி.பியும் மோத ஆரம்பித்து விட்டது என்றனர். மேல் மாகாணத்தில் மேலதிக வகுப்புக்களைத் தடை செய்யப் பிரதமர் எடுத்த முடிவு தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்கவின் தலையீட்டில் நீக்கப்பட்ட போதும், அரசாங்கத்துக்குள் மோதல் என்று எதிர்க்கட்சியினர் கூறினர்.


மக்கள் விடுதலை முன்னணியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் தமது சம்பளத்தைக் கட்சியின் வங்கிக் கணக்கிலிட்டு அதிலிருந்து ஒரு பகுதியை மட்டும் பெற்றுக்கொள்கிறார்கள். இதனை எதிர்த்து தேசிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் கட்சியிலிருந்த விலகப்போவதாகவும் தேசிய மக்கள் சக்தி பிளவுபடப் போவதாகவும் சில வாரங்களுக்கு முன்னர் எதிர்க்கட்சியினர் கூறினர். பின்னர் அவர்களே அதனை மறந்து விட்டனர்.

தேசிய மக்கள் சக்தியானது நாட்டில் ஏனைய அரசியல் கூட்டணிகளைப் போன்றதொன்றல்ல. அதிலிருந்து உறுப்பினர்கள் தனித் தனியாக விலகிச் செல்லலாம். ஆனால், அதன் அமைப்பைப் பொறுத்தவரை அது பிளவுபடுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகும்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் ஏனைய அமைப்புக்கள் என்ற ரீதியில் (திசைக்காட்டியும் ஜே.வி.பியுமாக) அது பிளவுபடுவதாக இருந்தால் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் விடுதலை முன்னணியல்லாத அமைப்புக்கள் ஒன்று சேர வேண்டும். அதற்கான வாய்ப்பும் மிகவும் அரிதாகும்.

தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டமைப்பானது மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட 21 அமைப்புகளின் கூட்டாகும். அவற்றில் சில அமைப்புக்கள் மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் அம்முன்னணியால் உருவாக்கப்பட்டு அதன் கட்டுப்பாட்டில் இயங்கும் அமைப்புக்களாகும். ஏனையவை எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாத மிகச் சிறிய அமைப்புக்களாகும். அவை ஒன்று சேர்ந்து மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து பிரிந்து சென்றாலும் அவற்றால் அரசியல் ரீதியாக எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது.

அவற்றின் பலம் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ஆகியவற்றில் காணக்கூடியதாக இருந்தது. தேசிய மக்கள் சக்தி 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் மூன்று வீத வாக்குகளை மட்டுமே பெற்றது. மக்கள் விடுதலை முன்னணி தனியாகப் போட்டியிட்டு இருந்தாலும் அத் தேர்தலில் அதுவே நடந்து இருக்கும். எனவே பிரிந்து சென்று இச்சிறிய அமைப்புக்களால் எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்த முடியாது. எதிர்க்கட்சிகளின் கூற்றுக்களைத் தவிர அவ்வாறான பிளவுக்கான தெளிவான அறிகுறிகளும் தெரியவில்லை. ஆயினும், 'சுபரிம் சட்' அறிக்கை அவர்களது தலையில் விழுந்த இடியென்பதையும் ஏற்கத்தான் வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்துவிடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டு விடுவது உலக யதார்த்தம். ஆனால், நல்ல நண்பர் எத்தகைய துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும் காவல் செய்யும் காவலன் போல் இணைந்தே இருப்பான்.

நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி

இயலாது; என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக்கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது. எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### புனரமைக்காத வீதியால் பொதுமக்கள் அவதி

மஸ்கெலிய, காட்மோர் பிரதேசத்திற்குச் செல்லும் பிரதான வீதி சுமார் 20 வருடகாலமாக புனரமைக்கப்படாமையால் அப்பிரதேச மக்கள், நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் குற்றம் சுமத்துகின்றனர்.

1,500கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்ற குறித்த பகுதியில், வீதி குன்றும் குழியுமாகக் காணப்படு போக்குவரத்தினை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாக இவர்கள் சுற்றிக் காட்டுகின்றனர்.

அத்துடன், அவசர நோயாளர்களை இங்கிருந்து மஸ்கெலிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் நோயாளர்கள் இடையில் இறந்த சம்பவங்களும் பதிவாகியிருக்கிறது.

இது தொடர்பாக தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட எம்.பி. கிருஷ்ணன் கலைச்செல்வியை வினவிய போது, குறித்த வீதி புனரமைக்கப்பு பணிகள் தொடர்பில் மாவட்ட அபிவிருத்தி கூழு கூட்டத்தில் கலந்துரையாடி உள்ளோம். இந்த வீதி மாகாண சபைக்கு சொந்தமான வீதி, ஆகவே, இந்த வீதியில் புனரமைப்பு பணிகளுக்கான நிதியினை எமது அரசாங்கத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

- எஸ்.சதீஸ்





# உள பாதுகாப்பு பொறிமுறைகளும் ஆளுமை கண்ணோட்டமும்



சரவணன் லக்ஷஹரன்,
மூன்றாம் வருட உளவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

உளவியல், தனியவனின் நடவடிக்கைகளை அவன் வாழ்வின் அனைத்து பருவங்களிலும் ஆராய்கிறது. அவனது வாழ்வை பிறப்புக்கு முன்பிருந்து ஆரம்பித்துச் சிறு குழந்தைப் பருவம், முதிர்ச்சி பருவம், தளர்ச்சி பருவம் ஆகிய அனைத்து பருவங்களையும் ஆராய்கிறது. உளவியல் குழந்தை முதிர்ச்சி அடைந்தவுடன், இயல்பானவனை பிறழ்வானவுடன், மனிதனை விலங்குடன் ஒப்பிடுகின்றது. அது ஒரு தனிமனிதனுக்கும் இன்னொருவருக்கும் இடையில் நாம் வேறுபாடுகளை ஆராய்வதில் அக்கறை காட்டுகின்றது.அது கற்றல், நினைவுறுத்தல், சிந்தனை செய்தல், பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் , கற்பனை செய்தல், மெய்ப்பாடு, ஊக்க நிலை போன்ற நடவடிக்கையின் பொதுவான விதியில் பெருமளவு அக்கறை கொண்டுள்ளது.

உளவியல் பாதுகாப்பு பொறிமுறைகள் என்பது மனிதன் தனது வாழ்நாளில் அவனது உணர்வுகள், எண்ணங்கள், அல்லது நிகழ்வுகளைச் சமாளிக்க மக்கள் பயன்படுத்தும் உளவியல் ரீதியான உத்திகளையும் நடத்தைகளையும் குறிக்கின்ற தற்காப்பு நெறிமுறைகளாகக் காணப்படுகின்றது. இந்த தற்காப்பு பொறிமுறைகள் மனிதனது விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப அவன் சூழ்நிலையில் எவ்வாறு பிரயோகப்படுத்துகிறான்? என்பதைப் பொறுத்து அமையப் பெற்றுள்ளதாகக் காணப்படுகிறது. ஒரு செயலைத் தொடங்கும் போது அச்செயலின் ஏற்படும் நன்மை தீமைகளை அறிந்து அதில் மனிதன் நன்மைகளை மாத்திரம் தான் விரும்பத்தக்கவனாகக் காணப்படுகின்றான். தனது தீமைகள் இருந்து தான் விலகிச் செயல்படுவதற்கான பல்வேறு பட்ட பொறிமுறைகளை தன்னால் உணர்ந்தோ அல்லது சுயமாகவோ நிலையிலிருந்து விடுபட்டுச் செயல்பட முயல்கின்றான்.

இதன் காரணமாக அவனது பாதுகாப்பு பொறிமுறை ஆளுமையிலும் உளவியல் கண்ணோட்டமாக முக்கிய இடம் பிடிக்கின்றது. இதனை சிக்மண்ட் ஃப்ரைடின் உளவியல் ஆளுமை கூறுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, இட்டீகோ மற்றும் சூப்பர் ஹீரோவின் தொடர்பு இங்கு முக்கியத்துவம் பெறுகிறது தனது சுயநலத்தின் மீது உள்ள பிடிவாத குணத்தினால் மேலிருந்து காணப்படும் ஒவ்வொரு ஆசை விருப்பங்களையும் சமூகத்தின் எந்தவித கட்டுப்பாடுகளுக்கும் கீழ்படியாமல் தான் நிறைவேற்றிக் கொள்வதற்குத் துடிக்கும்போது, அதனைத் தடை செய்து ஈகோ வானது அதனை நடுநிலை வகித்து சமூகத்தின் விதிமுறைகளுக்குக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஒரு தனி மனிதன் எதனைச் சாதிக்க வேண்டும்...? எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் ? சமூக ரீதியான விதிமுறைகள் என்னென்ன ?.. விளங்கப்படுத்தி மனிதனை ஒருநிலைப்படுத்தி சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் செயல்பட தூண்டுகின்றது. இவ்வாறான பாதுகாப்பு ஒருமுறைகள் மனிதன் தன் வாழ்நாளில் சுயமாக உணராதும் தனது செயற்பாட்டினை திறன் பட மேற்கொள்வதற்காக அவன் விலங்கி நின்று தன்னை சார்ந்து முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுவதால் இவை முக்கியத்துவம் பெறுகின்றன என சிக்மண்ட் பிராய்ட் தனது கருத்தின் வாதாடுகின்றார். இவரின் பாதுகாப்பு வழிமுறைகளில் புறக்கணித்தல், பின்வாங்குதல், பகற்கனவு, ஈடு செய்தல், ஒன்றுதல், பின்னோக்கு, இடம் மாற்றம், அகநோக்குடமை, காரணம் கற்பித்தல், தெரிந்தெடுத்த மறதி, எதிர்வினை உருவாக்கம் , பகுதி படுத்தல் , பகுத்தறிவு என்பதை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன.

புறத்தெரித்தல் என்பது எனது சகோதரனை ஓர் உதாரணம் காட்டி இதனை விளங்கப்படுத்தலாம் என முயல்கின்றேன். அதாவது அவனது ஆற்றல் மற்றும் செயற்பாடுகள் அனைத்தும் கலை மற்றும் விளையாட்டுப் போக்கு உடையதாகக் காணப்படும் பெற்றிருந்தாலும் அவனது போட்டி நேரங்களில் அவன் ஏதாவது ஒன்றைச் சாட்டி அவன் தோல்வியடையும் போது, பிறரின் குற்றச்சாட்டை அவன்பால் எடுத்து இதுதான் தோல்விக்குக் காரணம் என குறை காட்டி விடுவான். இது புறத்திரிதலுக்கு சிறந்த ஒரு உதாரணமாகக் காணப்படுகின்றது. உதாரணமாக, அவனது கலை விஞ்ஞான போட்டி ஒன்றில் அவன் பதிலளிக்கத் தவறியதால் அவனின் குழு நிலையில் உள்ள அனைவருக்கும் தோல்வி நிலைச் சூழ்நிலை ஏற்பட்டது. அதன் போது அவன் தான் விட்ட பிழையை ஒப்புதல் அளிக்காமல், குழு நிலையில் உள்ளவர்கள் சரியாக எனக்கு நேர அவகாசம் கொடுக்கவில்லை. என்னுடன் கலந்துரையாடவில்லை என்று சூழ்நிலையைக் காரணம் காட்டி, அவனது குற்றத்தை புறத்தெரித்துள்ளான். நான் இது அவன் தான் அறிந்து உளவியல் பாதுகாப்பு பொறிமுறையை கையாண்டுள்ளதாகக் காணப்படுகின்றது இது தான் தோல்வியைச் சகித்துக் கொள்ள முடியாத தன்மையை அவன் விட்டு விலகும் ஒரு சந்தர்ப்பமாக நான் பார்க்கின்றேன்.

அவ்வாறு புறதெறித்தலில் பிரிதோர் உதாரணமாக மாணவர்கள் கல்வியில் பெறும் பேறுகள் சிறந்தாக பெறாத போது அவர்கள் பாடசாலையையோ படிப்பித்த ஆசிரியர்களையோ அல்லது வழங்கப்பட்ட வினாத்தாளில் உள்ள கேள்விகளையோ புறம் சாற்றி அவர்கள் தனது வெற்றியை நிரூபிக்க முடியாது போனதற்கான காரணத்தைச் சுட்டிக்காட்டி, தன் மீது உள்ள பிழையை புறந்தள்ளுவர். மடைமாற்றம் மன இறுக்கமும் மனம் முடிவும் ஏற்படுத்திக் கொள்வதற்கு பதிலாக தன்னிடம் உள்ள ஊக்கிகளை அனைத்தையும் சமூக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு உயரிய ஊக்கியாக மாற்றுதலாகும். அதாவது தனக்கு இழைக்கப்பட்ட குற்றங்கள் அல்லது சூழ்நிலையால் ஏற்பட்ட எதார்த்த உண்மைகளைத் தான் மீண்டு கொள்வதற்காக அதிலிருந்து விலகி நின்று செயல்படும் தன்மையாகும். அல்லது கற்பனையில் அதன் நிகழ்வதற்கான காரணத்தைச் சுட்டிக்காட்டி அதனுடன் சேர்ந்து பயணித்து வாழ்வதே ஆகும்.உதாரணமாக எனது மாமியார் ஒரு 12 வருடங்களாகத் திருமணம் முடித்தும் பிள்ளைப்பேறு இல்லாமல் காணப்பட்டாள். அதன்போது அவள் மடைமாற்றத்தின் வழியாகத் தன்னிலை அறியாது கோயில் குளம், தேவாலயங்கள், பள்ளிவாசல், குறி சொல்பவர்கள், சாமியார் மூலம் பிள்ளையைப் பெற அதீத அக்கறையுடன் ஈடுபட்டு காணப்பட்டாள். காரணம் தனக்கான பிள்ளைப்பேற்றினை நான் பெற்றுக் கொள்ள வேண்டும். என்ற உணர்வை அதன் வாயிலாக அவள் நிவர்த்தி செய்து கொண்டாள், இந்த உணர்வு நிவர்த்தியானது பிள்ளை பெற்றெடுப்பதற்கான ஒரு மடைமாற்றச் செயல்பாடாக உளவியல் பொறிமுறை பாதுகாப்பு வழிமுறையில் உட்படுத்தி நாம் உதாரணமாக நோக்கலாம்.

அதேபோல் சில மனிதர்கள் தனது வாழ்வியலில் தனக்குக் கிடைக்கப்பெற வேண்டிய எதிர்பார்ப்புடன் காத்திருந்த நிகழ்வுகள் செயல்கள் தனக்கு வாழ்வின் நிகழாத போது அதனைக் கற்பனை உலகில் எமக்கு கிடைத்ததாக எண்ணிச் செயல்படுவார்கள் இதனை எனது ஊரில் உள்ள புத்தி சுவாதீனம் அற்ற ஓர் நபர் தனது வாழ்நாளில் அவர் ஆங்கில பாட ஆசிரியராக இருந்து தற்போது அவர் குடும்ப உறவுகளால் ஒதுக்கப்பட்டு வாழும் காரணத்தினால் எந்தவித ஐயமும் இன்றி குப்பைகளைக் கிளறுதல், கதைக்கும் நேரத்தில் வரும் மாணவர்களுடன் ஆங்கிலத்தில் பயமுறுத்துதல் , மகிழ்தல். தனது உடல் உள்ள சார்ந்த நடவடிக்கைகளில் எவ்வித ஈடுபாடையோ ஒரு சுய விருப்பையோ கருத்தில் கொள்ளாது யாசகரைப் போல, குப்பைகளை எடுத்துக்கொண்டு அங்கு இங்கும் திரியும் நபராக வாழ்ந்து வருகிறார். இதன் போது தனி மனிதன் எடுத்து எதிர்பார்ப்பு கிடைக்கப்பெறாத தருணத்தில் அது உச்சக்கட்டம் அடையும் பொழுது அவன் உள ரீதியில் பாதிக்கப்பட்டு உள நோயை தோற்றுவிக்கக் கூடியதாக இவன் அடை மாற்றம் காணப்படுவதைக் கண்கூடாக சமூகத்தின் நோக்கப்படக்கூடியதாக உண்டு.

ஒவ்வொரு உளவியல் செயல்முறையும் ஓர் தனிச்சிறப்பு வாய்ந்த பரப்பாகக் காணப்படுகின்றது. இந்த உள பாதுகாப்பு பொறிமுறைகள், மன அழுத்தத்தைச் சமாளிக்க உதவுகின்றன. சில உளகவசங்கள் ஆளுமையை உயர்த்தும். (ex - Sublimation, Humor), சில ஆளுமையைப் பாதிக்கும்.(ex: Denial, Regression). ஒவ்வொரு மனிதனின் மனநிலை, அனுபவங்கள், வளர்ச்சி சூழல் ஆகியவை இதற்கான அடிப்படையாகத் திகழ்கின்றன.




ஜனநாயகத்தின் கழுத்தில்

# தொங்கும் வாளாக பயங்கரவாத தடைச் சட்டம்

## தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?



தி.டிலக்சன்,
அரசறிவியல் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

இலங்கையில் பல தசாப்தங்களாக ஜனநாயகத்தின் கழுத்தில் தொங்கும் வாளாகப் பயங்கரவாத தடைச் சட்டம் இருந்து வருகிறது. இந்தச் சட்டம் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்டாலும் அரசியல் எதிர்ப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், அப்பாவி மக்கள் மற்றும் சிறுபான்மையினரை ஒடுக்குவதற்கான ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த வரலாறு மிகவும் கசப்பானது. இத்தகைய சூழலில் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த பிறகு இந்தச் சட்டத்தை நீக்குமா அல்லது அதே பழைய வழியில் அதனைத் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தப் பயன்படுத்துமா என்ற கேள்வி அனைத்துத் தரப்பினராலும் உற்றுநோக்கப்பட்டு வருகிறது.

இது வெறுமனே சட்டரீதியான விவாதம் அல்ல மாறாக இலங்கையின் எதிர்கால ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு கேள்வி. இது பற்றிய விவாதங்கள் தற்காலத்தில் தொடர்ச்சியாக தேசிய மட்டத்தில் மட்டுமின்றி சர்வதேச மட்டத்திலும் விவாதிக்கப்பட்டு வருகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டம் 1979ஆம் ஆண்டில் இலங்கையில் கொண்டுவரப்பட்டது. தொடக்கத்தில் விடுதலைப் புலிகளின் போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இது தற்காலிகச் சட்டமாகவே அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர் 1982ஆம் ஆண்டில் இது நிரந்தரச் சட்டமாக மாற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதும் தேசியப் பாதுகாப்பைப் பாதுகாப்பதுமாகும்.

ஆனால், இந்தச் சட்டம் நடைமுறையில் பல கடுமையான விமர்சனங்களைச் சந்தித்தது. ஏனெனில் அது ஒரு சந்தேக நபரை நீதிபதி முன் நிறுத்தாமல் 18 மாதங்கள் வரை தடுப்புக் காவலில் வைக்க அனுமதிக்கிறது. அத்துடன், பொலிஸ் அதிகாரிகளால் பெறப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களை நீதிமன்றத்தில் சாட்சியாக ஏற்றுக்கொள்ளுதல், பிணை வழங்குவதில் உள்ள சிக்கல்கள், மற்றும் சித்திரவதை தொடர்பான குற்றச்சாட்டுகள் போன்ற பல அம்சங்கள் மனித உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானவையாகக் கருதப்படுகின்றன.

### தற்போதைய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

தேசிய மக்கள் சக்தி மற்றும் அதன் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்துள்ளனர். அவர்களின் தேர்தல் வாக்குறுதிகளில் இந்தச் சட்டத்திற்குப் பதிலாக மனித உரிமைகளை மதிக்கும் ஒரு புதிய வலுவான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதாகக் குறிப்பிட்டிருந்தனர் மேலும் ஒகஸ்ட் 7, 2025 அன்று பாராளுமன்ற அமர்வின்போது ஜனாதிபதி, “பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே தேசிய மக்கள் சக்தியினுடைய நிலைப்பாடு” என தெரிவித்தார். இந்த வாக்குறுதி பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் ஒரு புதிய நம்பிக்கையை தற்போது ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சட்டம் நீக்கப்பட்டால் அது இலங்கையின் ஜனநாயக வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

### பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதில் உள்ள சிக்கல் என்ன?

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது என்பது எளிதான காரியமல்ல. இதற்குப் பல சவால்கள் உள்ளன. முதலாவதாக இலங்கையில் பயங்கரவாதம் குறித்த அச்சம் இன்னும் முழுமையாக நீங்கவில்லை. ஈஸ்டர் தாக்குதல்கள் போன்ற நிகழ்வுகள் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் முற்றிலும் ஒழிக்கப்படவில்லை என்பதை நினைவூட்டுகின்றன. இந்தச் சூழலில் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற வாதங்கள் வலுப்பெறக்கூடும்.

இரண்டாவதாக சர்வதேச சமூகத்தின் அழுத்தம் ஒருபுறம் இருந்தாலும் சில உள்நாட்டு அரசியல் சக்திகள் மற்றும் பேரினவாதிகள் பயங்கரவாத தடைச் சட்டத்தைத் தொடர வேண்டும் என்று வாதிடலாம். சில தேசியவாத சக்திகள் பாதுகாப்புப் படையினருக்குக் கூடுதல் அதிகாரங்களை வழங்கும் சட்டங்கள் தேவை என்று வலியுறுத்தலாம் மற்றும் சிறு பான்மை சமூகத்தவரை ஒடுக்குவதற்குள்ள சிறப்பான கருவியாக இதைப் பயன்படுத்தலாம். இவ்வாறான விடயங்கள் தடையாகக் காணப்படுகின்றன.

தற்போதைய அரசாங்கம் இச் சட்டத்தை நீக்குமா அல்லது தமது அரசியல் நோக்கத்திற்குப் பயன்படுத்துமா?

தற்போதைய அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளி கவலையளிப்பதாக உள்ளது.இந்த சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தப்படும் சாத்தியங்கள் இந்த அரசாங்கத்திலும் தொடர்கின்றன. உதாரணத்துக்கு, கடந்த மாதங்களில் இஸ்ரேல் எதிர்ப்பு ஸ்டிக்கரை வாகனத்தில் ஒட்டியதற்காக ஒரு இஸ்லாமிய இளைஞர் கைது செய்யப்பட்டது மற்றும் ஊடகவியலாளர் குமணனைப் பயங்கரவாத தடுப்புப் பிரிவு தொடர்ச்சியாக அச்சுறுத்தி விசாரணைக்கும் அழைத்து இருப்பது இந்த பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் ஆகும். இவ்வாறான இன்னும் பல எதிர்ப்பு நடவடிக்கைகள் தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த நடவடிக்கைகள் தனி மனித சுதந்திரத்திற்கும், மனித உரிமை மற்றும் ஊடக சுதந்திரத்திற்கும் எதிரான அடக்குமுறையாகவே பார்க்கப்படுகிறது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்தை எட்டியிருக்கும் நிலையில், பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவது தொடர்பில் குறிப்பிட்டாலும் இச் சட்டத்தை அரசியல் ஆயுதமாக தமது ஆட்சிக் காலத்திலும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது.

இந்தச் சட்டத்தை தற்போதைய அரசாங்கம் நீக்குவது என்பது எளிதான காரியமல்ல. இதற்குப் பல சவால்கள் உள்ளன. தேசியப் பாதுகாப்பு குறித்த வாதங்கள் மற்றும் சில உள்நாட்டு அரசியல் சக்திகளின் எதிர்ப்பு போன்றவை அரசாங்கத்தின் முடிவைப் பாதிக்கலாம். இந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை நீக்குவதற்குப் பதிலாக அதில் சில திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை மட்டும் சமாளிக்கலாம். ஆனால், அது முழுமையான தீர்வாக அமையாது. கடந்த அரசாங்கங்களால் பல தமிழ் கைதிகள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் பல ஆண்டுகளாக தண்டனைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு தற்போதைய அரசாங்கம் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்குமா இல்லையா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இருப்பினும், இந்தச் சட்டத்தை முழுமையாக நீக்காமல் அதைத் தக்கவைத்துக்கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் அது மீண்டும் தவறாகப் பயன்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது என்ற அச்சம் இன்னும் நிலவுகிறது. குறிப்பாக அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிராக வலுவான எதிர்ப்பு ஏற்படும்போது இந்தச் சட்டம் மீண்டும் அரசியல் ஆயுதமாக மாறக்கூடும். அத்தகைய சூழ்நிலையில் மக்கள் மீண்டும் துன்புறுத்தப்படுவார்கள் என்ற பயம் நியாயமானது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது என்பது வெறும் சட்டரீதியான மாற்றம் மட்டுமல்ல அது ஒரு அரசியல் விருப்பம். புதிய அரசாங்கம் இந்தச் சட்டத்தை நீக்குவதன் மூலம் மக்கள் மத்தியில் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை வளர்க்க முடியும். அதேசமயம் இந்தச் சட்டத்தைத் தக்கவைத்துக்கொண்டால் அது கடந்தகால அரசாங்கங்கள் செய்த தவறுகளையே மீண்டும் செய்வதாக அமையும்.

எனவே, தற்போதைய அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. ஆனால், இந்த மாற்றம் நடைமுறையில் எவ்வாறு அமுல்படுத்தப்படும் என்பதைப் பொறுத்துதான் அதன் வெற்றி அமையும். புதிய அரசாங்கம் இந்தச் சட்டத்தை நீக்கி மனித உரிமைகளை மதிக்கும் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவரும்போதுதான் இலங்கை பயங்கரவாத சட்டத்தின் நிழலில் இருந்து முழுமையாக விடுபடும். அதுவரை இந்தச் சட்டம் சிறுபான்மை சமூகத்தையும், ஊடக சுதந்திரத்தையும், தனிமனித சுதந்திரத்தையும், மனித உரிமையையும் மற்றும் ஜனநாயகத்தையும் கேள்விக்கு உட்படுத்தும் ஒன்றாகவே காணப்படும். இந்த அரசாங்கம் இந்தச் சவாலை வெற்றிகரமாக எதிர்கொண்டு ஒரு புதிய அத்தியாயத்தைத் திறக்குமா அல்லது பழைய புத்தகத்தின் பக்கங்களையே மீண்டும் வாசிக்குமா என்பதை வரும் காலமே தீர்மானிக்கும்.

“சட்டத் திருத்தம் முழுமையான தீர்வு அல்ல சட்ட நீக்கமே முழுமையான தீர்வு”

லண்டன்

## புட்டின் – ட்ரம்ப் அமைதிக்கான
# பேச்சுவார்த்தையில் இரகசிய பெண்



அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் நேரில் சந்தித்து பேசுகின்றனர். இந்த சந்திப்பில் உக்ரைன் போர் அமைதிக்கான ஒப்பந்தம் பற்றி இருவரும் ஆலோசனை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை ட்ரம்ப், அவருடைய ட்ரூத் சமூக வலைத்தள பக்கத்தில் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், இந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான சாத்தியம் பற்றி உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அச்சம் கொண்டுள்ளார். ஆனால், உக்ரைன் விடயத்தில் அமெரிக்காவின் நிலைப்பாடு ஒரு முழு வடிவம் பெறுவதற்கு இரகசிய நபராக ஒருவர் செயல்படுவார் என பிரித்தானிய அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இந்த நிலையில், புட்டினுடனான, உக்ரைன் அமைதி ஒப்பந்தம் தொடர்பான ட்ரம்பின் பேச்சுவார்த்தைக்கு பின்னணியில் பலம் வாய்ந்த பெண்மணியாக மெலனியா செயல்படுவார் என கூறப்படுகிறது.

புட்டினின் நோக்கங்கள் போரை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் இல்லை என ஜெலன்ஸ்கி தொடர்ந்து கூறி வருகிறார். அதற்கேற்ப, தொடர்ந்து ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. பொருளாதார தடைகள் உள்ளிட்ட எந்தவித தடையையும் ரஷ்யா இலட்சியம் செய்யாமல் போரில் ஈடுபட்டு வருகிறது.

இதனை யூகித்த மெலனியா, அதுபற்றிய சந்தேகங்களை எழுப்பி, ரஷியாவின் நோக்கங்கள் என்ன என்பது பற்றி கேள்வி எழுப்பும்படி ட்ரம்பை தூண்டியுள்ளார். இதனால், புதினின் இராஜதந்திரம் தடம் புரளும் வகையில் செயல்பட்டு, அமெரிக்காவின் கொள்கையை மெலனியா உயர்த்தி பிடிப்பாரா? என உலக நாடுகள் ஆர்வத்துடன் காத்திருக்கின்றன.

2ஆவது முறையாக ட்ரம்ப் ஜனாதிபதியாக பதவியேற்றபோது, தன்னுடைய சிந்தனையை ஒரு வடிவத்திற்கு கொண்டு வந்தவர் மெலனியா என வெளிப்படையாகவே டிரம்ப் கூறினார். அதனால், இந்த முறை புதினுடனான டிரம்பின் பேச்சுவார்த்தையில் மெலனியாவின் பங்கும் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வொஷிங்டன்

# சீனாவிற்கு 90 நாட்கள் அவகாசம்



சீனாவிற்கான பரஸ்பர வரிவிதிப்பிற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இன்னும் 90 நாட்கள் கூடுதல் அவகாசம் அளித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இடையே நடைபெறும் வர்த்தக போர் கடந்த சில ஆண்டுகளாகத் தீவிரமடைந்து வருகிறது. அமெரிக்கப் பொருட்களுக்கு சீனா அதிக வரி விதித்து வருகிறது என அதிபர் டிரம்ப் குற்றம் சாட்டினார்.

இதனையடுத்து, அவர் அமெரிக்காவில் சீன பொருட்களுக்கு அதிக வரி விதிக்க தொடங்கினார். இதற்குப் பதிலடியாகச் சீனாவும் வரி விதித்தது. இதனால் அமெரிக்கா-சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தக போர் தொடங்கியது.

அமெரிக்கா-சீனா இடையேயான வர்த்தக போர் உலக நாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இதனால் எரிபொருள், உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு உள்ளிட்ட பாதிப்புகளை வளர்ந்து வரும் நாடுகள் உள்பட பல்வேறு நாடுகள் எதிர்கொண்டுள்ளன.

இதற்கிடையே ஒரு கட்டத்தில் சீன பொருட்களுக்கு அமெரிக்கா 145 சதவீதம் வரி விதித்தது.

இதையடுத்து, இரு நாடுகளுக்கு இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து புதிய வரி விதிப்பை இரு நாடுகளும் 90 நாட்களுக்கு நிறுத்தி வைத்தன.

இந்நிலையில், சீனாவிற்கான பரஸ்பர வரிவிதிப்பிற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இன்னும் 90 நாட்கள் கூடுதல் அவகாசம் அளித்துள்ளார்.

இதற்கான உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



புதுடெல்லி

## டெல்லி – வொஷிங்டன்
# விமான சேவை தற்காலிகமாக நிறுத்தம்

குஜராத்தின் அகமதாபாத்தில் இருந்து லண்டனுக்கு சென்ற எயார் இந்தியா விமானம் விபத்தில் சிக்கியதை தொடர்ந்து, 26 போயிங் 787-8 ட்ரீம்லைனர் விமானங்களில் பல்வேறு மறுசீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகிறது. இதன் காரணமாக, டெல்லி-வொஷிங்டன் இடையேயான நேரடி விமான சேவையை செப்டெம்பர் ஒன்றாம் திபதி முதல் அந்நிறுவனம் தற்காலிகமாக நிறுத்தயுள்ளது.

இது குறித்து எயார் இந்தியா விமான நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,

நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்டு திறனை உறுதி செய்யும் பணி நடைபெறுகிறது. இதற்காக டெல்லி - வொஷிங்டன் இடையிலான விமான சேவை அடுத்த மாதம் 1ஆம் திகதி முதல் நிறுத்தப்படுகிறது. 'போயிங் 787' விமானங்களின் மீதான மறுசீரமைப்பு நடவடிக்கை காரணமாக, 26 விமானங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதனால், விமானங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு இறுதிவரை இந்த நிலை நீடிக்கும். அதேசமயம், அமெரிக்காவின் நியூயார்க், சிகாகோ, சான்பிரான்சிஸ்கோவில் இருந்து வொஷிங்டன் செல்லும் விமானங்கள் தொடர்ந்து இயக்கப்படும். கனடாவின் டொரன்டோ மற்றும் வான்கூவர் உட்பட வட அமெரிக்காவின் ஆறு இடங்களுக்கும், எயார் இந்தியா தொடர்ந்து நேரடி விமானங்களை இயக்கும்" என்று தெரிவித்துள்ளது.

சென்னை

# "மாற்று சக்தி அல்ல, முதன்மை சக்தி"

மாற்று சக்தி அல்ல, முதன்மை சக்தி நாம் என்பதை உலகிற்கு மீண்டும் உணர்த்துவோம் என நடிகரும் தமிழக வெற்றிக் கழக தலைவருமான விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில், நம்மோட அரசியல் பயணத்துல அடுத்தடுத்த கட்டங்களத் தாண்டி வர்றோம்... இடையில் எத்தனை சவால்கள், நெருக்கடிகள் வந்தாலும் எல்லாத்தையும் மக்கள் சக்தியோட, அதாவது உங்க ஆதரவால கடவுளோட அருளால் கடந்து வந்துகிட்டே இருக்கோம்... வர்ற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு நாம முழு வீச்சுல தயாராகிட்டு வர்றோம்... இந்தச் சூழல்ல நம்மோட இரண்டாவது மாநில மாநாட்ட ஆகஸ்ட் 21 (21/08/2025) வியாழக்கிழமை மதுரை, பாரப்பத்தியில நாம நடத்த இருக்கிறது உங்க எல்லாருக்கும் தெரிஞ்சதுதான்...

முத்தமிழையும் சங்கம் வச்சு வளர்த்த மதுரையில், நம்ம கொள்கை எதிரியையும், அரசியல் எதிரியையும் சமரசமே இல்லாம எதிர்த்து நின்னு, ஜனநாயகப் போர்ல அவங்கள வென்று தமிழ்நாட்டு மக்களுக்கான நல்லாட்சிய நிறுவுவதே நம்ம குறிக்கோள் என்ற நிலைப்பாட்டை உறுதி செய்யறதுதான் இந்த மாநாடு... அதனாலதான் வைகை மண்ணில் நடக்கும் இந்த மாநாடு, வாகை சூடும் வரலாறு திரும்புகிறது: வெற்றிப் பேரணியில் தமிழ்நாடு' என்ற தேர்தல் அரசியல் மையக்கருத்த முன் வச்சி நடக்க இருக்குதுன்னு உங்களோட பகிர்ந்துக்கிறதுல ரொம்ப மகிழ்ச்சி.

மாநிலம் அதிர மாநாட்டிற்குத் தயாராவோம். மாற்று சக்தி நாமன்று. முதன்மை சக்தி நாம் என்பதை உலகிற்கு மீண்டும் உணர்த்துவோம்.

நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம் என்று கூறியுள்ளார்.



## ஹெறிட்டேஜ் டேர்பி:
# சாஹிராவை வீழ்த்திய அல் ஹுஸைனி

கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (10) அன்று நடைபெற்ற கொழும்பு சாஹிராக் கல்லூரியுடனான த ஹெறிட்டேஜ் டேர்பி கால்பந்தாட்ட சமர் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் கொழும்பு ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி வென்றது.

முதல் தடவையாக நடைபெற்ற இப்போட்டியானது 20 வயதுக்குட்பட்டோருக்கானதாக அமைந்திருந்தது.

## வென்ற அணிகளுக்கு
# பரிசுத் தொகையை வழங்கும் புதிய லீக்

■ எம்.யூ.எம். சனூன்



புத்தளம் கால்பந்தாட்ட லீக்கின் கடந்த நிர்வாகத்தால் நடாத்தப்பட்ட புள்ளிகள் அடிப்படையிலான தொடரில் வென்ற அணிகளுக்கு வழங்கப்பட இருந்த பரிசுத் தொகையை புதிய கால்பந்தாட்ட லீக் வழங்குவதற்கு முன்வந்திருப்பதாக அதன் தலைவர் முஹம்மது யமீன் தெரிவித்தார்.

லீக்கின் முன்னைய நிர்வாகத்தால் இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக புள்ளிகள் அடிப்படையிலான போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன.

எனினும் அப்போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு இதுவரையும் பரிசுத்தொகை வழங்கப்படவில்லை.

இந்நிலையை சரி செய்ய, தற்போதைய புதிய நிர்வாகம், அனைத்து பங்குபற்றிய அணிகளுக்கும் உரிய பரிசுத்தொகையை வழங்க தீர்மானித்துள்ளது.

புள்ளிகள் அடிப்படையிலான தொடரில் சம்பியனாகிய லிவர்பூல் அணிக்கு 100,000 ரூபாயும், இணை இரண்டாமிடங்களை பெற்ற நியூ ஸ்டார்ஸ் மற்றும் விம்பிள்டன் அணிகளுக்கு தலா 50,000 ரூபாயும், மூன்றாமிடம் பெற்ற போல்டன் அணிக்கு 25,000 ரூபாயும் பரிசு தொகையாக வழங்கப்பட உள்ளதாக யமீன் தெரிவித்தார்.

இது தவிர லீக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள 12 கழகங்களில் இந்த நான்கு கழகங்களை தவிர மிகுதி எட்டு கழகங்களுக்கும் தலா 10,000 ரூபாய் வீதம் வழங்கப்பட உள்ளதாகவும் யமீன் மேலும் குறிப்பிட்டார்.

இந்த பரிசுத் தொகைகளை வழங்கி வைக்கும் பொருட்டு விஷேட கண்காட்சி கால்பந்தாட்டப் போட்டி ஒன்று கூடிய விரைவில் இடம்பெற இருக்கின்றது. இந்த கண்காட்சி போட்டியிலே மேற்கண்ட தொடரிலே சம்பியனாகிய லிவர்பூல் அணியும் லீக் அணியும் கலந்து கொள்ள இருக்கின்றன.



# றொட்றிகோவை கைச்சாத்திட ஆர்வம் காட்டும் சிற்றி

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான றொட்றிகோவைக் கைச்சாத்திடுவதில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமது முன்களவீரர்களான ஜக் கிரெலிஷ், சவின்ஹோ, ஜேம்ஸ் மக்அட்டீ உள்ளிட்டோர் வெளியேறவுள்ள நிலையிலேயே 24 வயதான றொட்றிகோவைக் கைச்சாத்திட சிற்றி எதிர்பார்க்கிறது.

# செல்சி செல்லும் ஸ்கெவி சிமொன்ஸ்?



ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான ஆர்.பி. லெய்ப்ஸிக்கின் மத்தியகளவீரரான ஸ்கெவி சிமொன்ஸைக் கைச்சாத்திடுவதற்கான ஒப்பந்தமொன்றில் அதன் முன்னாள் முன்களவீரரான கிறிஸ்டோபர் என்குங்குவை உள்ளடக்குவதற்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி தயாராகவுள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த பருவகாலத்தில் மூன்று கோல்களையே 27 வயதான என்குங்கு பெற்றதுடன், 18 போட்டிகளில் மாற்று வீரராகவே களமிறங்கியிருந்தார்.

எவ்வாறாயினும் சிமொன்ஸுக்கு பாரிய தொகையை லெய்ப்ஸிக் எதிர்பார்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிரெலிஷுக்காக கடன் ஒப்பந்தத்துக்கு
# இணங்கினார் எவெர்ற்றன்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ஜக் கிரெலிஷுக்காக, பருவகாலம் முழுவதுக்குமான கடன் ஒப்பந்தத்துக்கு இன்னொரு பிறீமியர் லீக் கழகமான எவெர்ற்றன் இணங்கியுள்ளது.

கடந்த பருவகாலத்தின் இறுதி லீக் போட்டிக்கான குழாம், சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் கழக உலகக் கிண்ணத் தொடருக்கான குழாம்களில் 29 வயதான கிரெலிஷ் இடம்பெற்றிருக்கவில்லை.

இன்னொரு லீக் கழகமான அஸ்தன் வில்லாவிலிருந்து 2021ஆம் ஆண்டு சிற்றியில் கிரெலிஷ் இணைந்திருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 13, ஒகஸ்ட் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.